# Die Anhörung im Asylverfahren – Übersetzung in Tamil

தமிழ் (TAMIL)

அரசியல் தஞ்சம் கோருவோருக்கான தகவல்கள்.

---

Unabhängige Asylverfahrensberatung finden Sie an diesen Orten in Bielefeld:

- Unterkunft „Oldentruper Hof“, Niedernholz 2, Bielefeld
- Unterkunft „Hotel Südring“, Gütersloher Str. 259, Bielefeld
- Zentrale Ausländerbehörde (ZAB), Am Stadtholz 26, Bielefeld

You find independent consultation on the asylum process in the EAE Bielefeld here:

- Camp “Oldentruper Hof”, Niedernholz 2, Bielefeld
- Camp “Hotel Südring”, Gütersloher Str. 259, Bielefeld
- Zentrale Ausländerbehörde (ZAB), Am Stadtholz 26

Sie können mit diesen Personen sprechen: / You can talk with:

Deutsches Rotes Kreuz

**Richard Reifengerst, 0163/7400353 (Südring/ZAB)**

**Olga Lakizyuk, 0178/9090486 (Hotel Südring)**

---

AK Asyl e.V.

**Paulina Müller, 0521/546515-77 (Hotel Südring)**

**Ari Faizy, 0521/546515-64 (Hotel Südring)**

**Katharina Bracke, 0521/546515-62 (Oldentruper Hof/ZAB)**

**Durcan Kaya, 0521/546515-22 (Oldentruper Hof)**

---

IMAG e.V.

**Pia Villasenor, 0521 / 23828916 (Oldentruper Hof/ZAB)**

---

AWO Fachdienste Migration und Integration

**Jan Plöger, 0521 / 30438896 (Oldentruper Hof/ZAB)**

AMNESTY INTERNATIONAL · AWO · caritas · DEUTSCHES ROTES KREUZ · Diakonie · PARITÄT · PRO ASYL DER EINZELFALL ZÄHLT.

Unautorisierte Übersetzung; Quelle: www.asyl.net

# தமிழ் (TAMIL)

## அரசியல் தஞ்சம் கோருவோருக்கான தகவல்கள்.

---

இத்தகவல்கள் Nordrhein-Westfalen இல் இருக்கும் அரசியல் தஞ்சம் கோருவோருக்காக ப்ராடெஸ்டென்ட் ஆலோசனை சபையால் எழுதப்பட்டவை.

நாங்கள் உங்களுக்கு விபரம் கூற விரும்புகின்றோம்.

- உங்களின் அரசியல் தஞ்ச விசாரணைக்கு எவை முக்கியம்..
- ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோருவோருக்கான உரிமையும் கடமையும்

ஜேர்மனியில் தஞ்சம் கோரும் சட்டங்கள் மிகவும் சிக்கலானவை.. அரசியல் துன்புறுத்தலால் சில தஞ்சம் கோருவோரே அங்கீகரிக்கப்படுகின்றனர். தயவு செய்து இத்தகவல்களை வாசித்து அரசியல் தஞ்சம் கோருவோருக்கான ஸ்தாபனங்களை உடனே நாடுங்கள். இந்த விபரங்களை நீங்கள் இவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்:

**Ak Asyl e.V.**
Kavalleriestraße 26
(Eingang Paulusstrasse)
33602 Bielefeld
Tel.: 0521 787152-40

**DRK KV- Bielefeld e.V.**
**August Bebel Str. 6**
**33602 Bielefeld**
**Tel.: 0521/ 52998-34**

நாங்கள் தஞ்சம் கோரும் விசாரணை சம்பந்தமான உங்கள் கேள்விகளுக்கு மறுமொழி கூறுவதுடன் மற்றும் ஆலோசனை கூறும் நிறுவனங்களின் முகவரிகளையும் உங்களுக்குத்தருவோம். ஜேர்மனியில் நல்லபடி இருக்க நாம் விரும்பி உதவி செய்வோம். உங்கள் உரிமையைப்பற்றி அறிவதற்கு இவை முக்கியம் என நம்புகிறோம்.

---

அரசியல் தஞ்ச விண்ணப்பம் என்றால் என்ன?
அரசியல் தஞ்ச விசாரணைகள் கீழ்காணும் கேள்விகளால் சோதிக்கப்படுகின்றன.

- நீர் உமது நாட்டில் அரசியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்டரா(ஜேர்மன் சட்டம் 16GG(அமைப்பு) அல்லது §51AuslG(பிறநாட்டவர் சட்டம்)?
- உம்மை நாடுகடத்தல் செய்யாமல் இருப்பதற்குரிய வேறு காரணங்கள் இருக்கின்றதா(உ+ம் அபாயமான சித்திரவதை இறப்புத்தண்டணை அபாயமான வாழ்வு)?

இந்த கேள்விகளைத் தீர்மானித்தவர்கள் ஜேர்மன் வெளிநாட்டு அகதிகளை அங்கீகரிக்கும் ஸ்தாபனமாகும்.(Bundesamt)

# நீங்கள் அகதிகள் விண்ணப்பத்திற்கு விண்ணப்பித்தால் என்ன நடக்கும்?

முதல் நீங்கள் மத்திய வெளிநாட்டவர் அதிகாரிகளால் பதிவு செய்யப்படுவீர்கள்.(Zentralen Ausländerbehörde) அவர்கள் உங்களது. விசாரணை எங்கே நடக்கும் என்றும் முதல் மூன்று மாதங்களும் எங்கே வசிக்கவேண்டும் என்றும் தெரிவிப்பார்கள். ஜேர்மனியில் அகதிகள் விண்ணப்பம் செய்தவர்கள் ஜேர்மனியின் பல பாகங்களுக்கும் அனுப்பப்படுவார்கள். முதல் அகதிகள் குடியமர்த்தப்பட்ட இடத்தில் வசிக்கவேண்டும். (in German Aufnahmeeinrichtung)

பதிவு செய்யும் இடத்தில் உன்னைப்பற்றிய தகவல்களைக் கேட்பார்கள்(பெயர் பிறந்ததிகதி பிறவிசயங்கள்). உங்களைச் சார்ந்த இனத்தவர்(உறவினர்) குடும்பங்கள் . ஜேர்மனியில் இருந்தால் அவர்களிடம் தெரிவிக்கவேண்டும். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்ற முகவரியையும் கொடுக்கவேண்டும். உங்களை சிலவேளை வேறு நகரங்களுக்கும் அனுப்பலாம். இனத்தவர்களின் இடத்தில் இருந்து தூரமாகவும் இருக்கலாம். உங்களது கணவர் அல்லது மனைவி ஜேர்மனியில் இருந்தால் அவர்களது அருகாமையில் வசிக்க உங்களுக்கு உரிமை உண்டு. 18வயதிற்கு குறைவான பிள்ளையாய் இருந்தால் பெற்றோருடனோ பாதுகாவலருடனோ வசிக்க உரிமை உண்டு.

முக்கியம்: பதிவு செய்தவுடன் (Bundesamt) மிக விரைவாக உங்களின் கணவரோ மனைவியோ எங்கு இருக்கிறார்கள் என்ற பெயரும் விலாசமும். கொடுக்கவும். முதல் சில கிழமை அடுத்திருக்கும் அகதிகள் வசிக்கும் இடத்தில் தங்க வைப்பார்கள். பின் உங்களது கணவரின் இடத்திற்கோ மனைவியின் இடத்திற்கோ மாற்றுவார்கள்.

–பதிவு செய்யப்பட்டபின் விரல் அடையாளம் எடுப்பார்கள். உங்களையும் உங்கள் பையையும் சோதனை இடலாம். ஜேர்மன் அதிகார நிறுவனம். (Bundesamt) நீங்கள் வேறு நகரில் அகதிகள் விண்ணப்பம் செய்தவர்களா அல்லது வேறு நாட்டின் ஊடாக விமானம் மூலமாக பிரயாணம் செய்தீர்களா என்று அறிய முற்படுவார்கள்.

## சொந்த நாட்டில் இருந்து பாதுகாப்பு:

Bulgarien, Ghana, Polen, Rumänien, Senegal, Slowakische Republik, Tschechische Republik und Ungarn. போன்ற நாடுகளில் அடிக்கடி துன்புறுத்தல் இல்லையென ஜேர்மன் நாடு கருதுகின்றது.

இந்த நாடுகளில் இருந்து வந்தால் மாத்திரம் அகதிகளாக கணிக்கப்படுவீர்கள். இருந்தபோதிலும் நீங்கள் விரிவாக துன்புறுத்தல்களை விபரித்துச்சொல்லவேண்டும்.

புத்திமதிகளுக்கு காரியாலயத்தை நாடவும்.

## நேர்முக விசாரணை:

அகதிகள் விவகாரத்தில் நேர்முக விசாரணை மிக முக்கியமானது. உங்கள் தனிப்பட்ட அகதிகள் சம்பந்தமான காரணங்களைச் சொல்ல ஏற்படும் ஒரு சந்தர்ப்பமாகும்.
நேர்முக விசாரணையில் உங்கள் தனிப்பட்ட துன்பங்கள் துன்புறுத்தல்களை சொல்ல வேண்டும். உங்கள் தனிப்பட்ட விசயத்தைவிட உங்கள் நாட்டின் பொதுவான நிலைமைகள் முக்கியமானதல்ல.

எவை முக்கியமானதோ அவையாவையும் நேர்முக விசாரணையில் சொல்ல வேண்டும். நேர்முகவிசாரணைக்கு நன்றாகத் தயார் செய்ய வேண்டும். தேவையாயின் புத்திமதிகள் தரக்கூடிய காரியாலயங்களுடன் இணைந்து தயார் செய்யவும். அகதிகள் அதிகார நிறுவனம்(Bundesamt) உங்கள் விண்ணப்பத்தில் நம்பிக்கை ஏற்படவில்லையாயின் உங்கள் அகதிகள் விண்ணப்பத்தை நிராகரிப்பார்கள்.

### விசாரணைக்கு முக்கியமான தகவல்கள்

- நேர்முக விசாரணைக்கு உமக்கு நம்பிக்கையான ஒருவரைக் கூட்டிக் கொண்டு போக விரும்பினால் அகதிகள் அதிகார நிறுவனத்திடம் (Bundesamt) விசாரணைக்கு முன்பு தெரிவிக்க வேண்டும். இது உங்களது உரிமையாகும். பெண் அகதியாக இருந்தால் விசாரணை செய்பவரும் பெண்ணாகவே இருக்க வேண்டுமானால் விசாரணைக்கு முன்பு தெரிவிக்க வேண்டும்.
- பாரதூரமான கெட்ட அனுபவங்களை அந்தநேரத்தில் சொல்ல விரும்பாமல்
இருக்கலாம் அந்த நேரத்தில் கதைக்க விரும்பாமல் இருக்கலாம். எப்படியாயினும் அகதிகள் விசாரணை முடிவானதாக இருக்கும். எனவே ஒரு வரியாவது உமது அனுபவத்தைப்பற்றி சொல்ல வேண்டும். அந்த விசயத்தைப்பற்றி கதைக்க எனக்கு கஸ்டமாக இருக்கிறதென்றும் சொல்லலாம்.
- நேர்முக விசாரணையின் போது உம்மால் ஏலாது இருந்தால் அதை விசாரணை செய்பவரிடம் சொன்னால் நிறுத்தி வைக்கப்படும்.
- அகதிகள் விசாரணை செய்யும் நிறுவனம்(Bundesamt) உங்களது நாட்டின் நிலைகள் பற்றி நன்றாக அறிந்திருப்பார்கள். எனவே நூதனமாக எதையும் சொல்லாமல் நேர்மையாக உங்கள் நாட்டில் உங்களுக்கு நடந்த இன்னல்களை சரியாகச் சொல்லவும்.
நடந்த திகதிகள் இடங்கள் போன்றவற்றை அறிய இந்நிறுவனம்(Bundesamt) மிக ஆவலாய் இருக்கும். நடந்த திகதிகள் பற்றி சரியாக சொல்ல முடியாது இருந்தால் பிழையாகத் திகதிகள் சொல்வதை விட ஒரு காலத்தை உதாரணமாகச் சொல்லலாம்.

கவனத்திற்கு:

பிழையாக ஏதும் இருந்தால் கையொப்பம் இடவேண்டாம். நீங்கள் சொல்லாமல் இருக்கலாம் அல்லது விளங்காமல் இருக்கலாம். சொல்லுக்குச் சொல்- மொழிபெயர்த்து சொல்லும்போது ஏதும் விளங்காமல் இருந்தால் அதைப் பற்றிக் கேட்கவும்.

நேர்முக விசாரணைக்கு நீங்கள் மிகவும் முக்கியமான நபர். எனவே நீராகவே மற்றயவர்கள் நடத்துவதற்கு ஏதுவாக இருக்கக் கூடாது. எதுஎது முக்கியமானதாகக் கருதுகிறீர்களோ, உணர்கிறீர்களோ அதைச் சொல்லலாம்.

## நேர்முக விசாரணை சம்பந்தமாக என்ன கேட்கிறீர்கள்?

### தப்பி வழி வந்த சம்பந்தமான கேள்விகள்.

Belgien, Dänemark, Finnland, Frankreich, Griechenland, Großbritannien, Irland, Italien, Luxemburg, Niederlande, Norwegen, Österreich. Polen, Portugal, Schweden, Schweiz, Spanien, Tschechische Republik. இந்த நாட்டின் மூலம் ஜேர்மன் நாட்டிற்கு பிரயாணம் செய்து வந்தால் அந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பக்கூடிய வாய்ப்பும் இருக்கின்றது. (முதன் முதலாக எந்த நாட்டில் வந்து சேருகின்றாரோ அங்கு அகதிகள் விசாரணை நடைபெறும்)
நீங்கள் வந்த வழி சம்பந்தமாக ஏதாவது ஆதாரம் இருந்தால் மாத்திரமே இது நடைபெறும். எந்த நாட்டின் மூலமாக நீங்கள் வந்தது என்பது தெரியாவிட்டால் அங்கு திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்.

### நீங்கள் வந்த வழி பற்றி கீழ்க்காணும் கேள்விகளைக் கேட்பார்கள்.

- எந்தவழி எப்படி (விமானம் மூலம் அல்லது வாகனம் மூலம் அல்லது கப்பல் மூலம்) எந்த திகதியில் உமது நாட்டை விட்டு வெளியேறினீர்?
- நீர் நேரடியாக விமானத்தில் பிரயாணம் செய்திருந்தீரா? செய்திருந்தால் ரிக்கற் போடிங்காட் சம்பந்தமான பத்திரங்களை கையில் வைத்திருக்கவும்.
- உங்களுடைய சொந்தமான பிரயாணச்சீட்டு (Passport) வைத்திருக்கிறீர்களா? அல்லது பிழையான பிரயாணச்சீட்டு வைத்திருக்கிறீர்களா?
- பிரயாணச்சீட்டு (Passport) பார்ப்பதற்கு எப்படி இருக்கும் உங்களிடம் விசா இருக்கிறதா? (இது உங்கள் நாட்டிலுள்ள ஜேர்மன் தூதராலயத்தால் சோதிக்கப்படும்)
- எல்லைச் சோதனைகளால் ஏதும் பிரச்சனை ஏற்பட்டதா?
- வேறு நாட்டில் நீண்டகாலமாக விமானப்பிரயாணத்திற்கு காத்திருந்தீர்களா? ஆம் என்றால் ஏன் அந்த நாட்டை விட்டு வெளியேறினீர்.

இந்தக் கேள்விகளுக்கு உண்மையாகவே பதில் சொல்ல வேண்டும். நீங்கள் தப்பி வந்த வழிகளை அகதிகள் விசாரணை நிலையம்(Bundesamt) நம்ப முடியாது இருந்தால் அகதிகள்விசாரணைக்கு நீர் சொல்லும் காரணங்களையும் நம்பமாட்டார்கள்.

விமானத்தில் வரவேண்டியதற்குரிய காரணங்கள்:

நேர்முக விசாரணைக்கு கீழ் காண்பவை முக்கிய விடயமாகும். உங்களுடைய விசாரணைக்கு பொருத்தமாக இருந்தால் இதைக் கதைக்கவும்.

(கீழ்காணும் வினாக்கள் உங்கள் உதவிக்காக எங்களால் தயாரிக்கப்பட்டவை. அதனால் நீங்கள் உங்கள் விசாரணைக்கு எது முக்கியம் என்று அறியலாம். விசாரணை உத்தியோகத்தர் (Bundesamt) நீங்கள் இங்கு வர வேண்டிய காரணங்களை விரிவாக கேட்கமாட்டார்கள்)

- என்ன முக்கிய காரணங்களுக்காக நாட்டைவிட்டு வெளியேறவேண்டும் என்று தீர்மானித்தீர்கள். கடைசியாக நடந்த முக்கிய நிகழ்ச்சியால் நீண்ட காலம் நாட்டில் இருக்கமுடியாத நிலை ஏற்பட்டதா?
- நீர் அரசியலில் தீவிர ஈடுபாடுடையவரா. எப்போது எங்கே யாருடன் வேலை செய்தீர்கள்?
- நீங்கள் கட்சிகளிலோ அமைப்புகளிலோ உறுப்பினராய் இருந்து ஆதரவு கொடுத்தீர்களா. அந்தப் பிரிவின் கடமைகள் என்ன. அதில் உங்கள் செயல்நிலை என்ன?
- நீங்கள் இராணுவத்தினால் பொலிசாரினால் ஒற்றர்களினால் (இரகசிய -பொலிஸ்) அல்லது மற்றயோரால் உங்கள் நாட்டில் துன்புறுத்தப்பட்டீர்களா. உமக்கு சரியாக என்ன நடந்தது? (உ-ம் மறியல் கேள்விவிசாரணைகள் வீட்டுச்சோதனைகள் கற்பழித்தல் நோய் வைத்தியம். இவற்றை விரிவாக விளங்கப்படுத்தவும். எப்போது எங்கே யார் எப்படி நடந்தது——)
- உங்கள் குடும்ப உறுப்பினர் நண்பர்கள் துன்புறுத்தப்பட்டார்களா? அரசியல் ஈடுபாடுடைய குடும்பத்தில் இருந்து வந்தீரா?
- உங்களுக்குத் தெரிந்த நண்பரோ குடும்பத்தினரோ ஜேர்மனியில் இருக்கின்றனரா? அவர்கள் அரசியல் தஞ்ச அந்தஸ்து பெற்றவர்களா? உங்களுடைய நாட்டில் என்ன நடந்தது என்பதற்கு அவர்கள் சாட்சியாக நடந்ததை சொல்ல முடியுமா?

- நா துனபுறுத்தபபட்டது சமபநதமாக ஏதாவது அததாட்சி வைத்திருக்கிறீர்களா? (உ+ம் கைதுசெய்வதற்குரிய உத்தரவு நீதி மன்றத் தீர்ப்பு புதினப்பத்திரிகைகட்டுரைகள் உமது கட்சியின் அல்லது அமைப்பின் அங்கத்துவசான்றிதழ் ) விசாரணை அதிகாரிகளிடமிருந்து இவைகளின் பிரதிகளை பெற்றுக்கொள்ளவும். அவர்கள் உங்களுக்கு அனுப்ப சிறு தாமதம் ஆகலாம். தயவுசெய்து எதற்கும் அவர்களிடம் தெரிவிக்கவும் -

நீங்கள் சரியாக விபரமாக உங்கள் சொந்த அனுபவத்தைக் கொண்டு எல்லாம் சொல்ல வேண்டியது முக்கியம்.

விசாரணை நேரத்தில் எல்லாக்கேள்விகளும் மறுமொழிகளும் ஜேர்மன் மொழியில் பதிவு செய்யப்படும்.

இந்த பதிவு நாடாவில் நிமிடங்களும் குறிக்கப்பட்டிருக்கும்.

உங்கள் தஞ்ச விண்ணப்பத்திற்கு தீர்மானம் எடுக்க இந்த நிமிடங்களும் அடிப்படையாக கொள்ளப்படும்.

நேர்முக விசாரணை முடிந்தபின் இந்தப்பதிவு நாடாவை மீண்டும் ஒருமுறை கேட்கவும்.|

இவை உமக்கு மொழிபெயர்த்து சொல்லப்படும். மொழிபெயர்ப்பு சரியாக இருக்கும் பட்சத்தில் கையொப்பமிடலாம். பிழையாக இருப்பின் கையொப்பம் இட மறுக்கலாம். பிழைகளைத்திருத்தியபின் உமக்கு நிறைவாக சரியாக இருந்தால் கையொப்பமிடலாம்.|

## உங்கள் அகதிகள் விண்ணப்பத்தை தீர்மானித்தால்

அ) பாதகமான தீர்ப்பு – உங்கள் அகதிகள் விண்ணப்பத்தை நிராகரித்தால்

உங்கள் அகதிகள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் (Bundesamt) நீங்கள் அதனை நிர்வாக நீதிமன்றத்தில் (beim Verwaltungsgericht) கவனத்திற்கு கொண்டுவரலாம். (மேன்முறையீடு செய்யலாம்) இந்தக் கோடு உமது வாழ்க்கையை விசாரித்து தீர்மானம் செய்யும் வரை இங்கு இருக்க அனுமதி உண்டு திருப்பி அனுப்பமாட்டார்கள்.

மிகமுக்கியமானதும் அத்தியாவசியமானதும் நீலநிற தபால் உங்களுக்கு வரும். அதில் வழங்கப்பட்ட திகதி குறித்திருப்பார்கள்.

இரண்டுவகையான நிராகரிப்புக்கள் உண்டு.

1) வெளிப்படையாக ஆதாரமற்றதாக இருந்ததால் அகதிகள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது

தபால் வழங்கப்பட்ட திகதியில் உங்களுக்கு ஒரு கிழமை இருக்கிறது. அவசரமான மேன்முறையீட்டு விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கு

இந்த அவசரமான விண்ணப்பம் நன்முறையில் நிறுவுதல் வேண்டும். அகதிகள் சட்டங்கள் தெரிந்த சிறந்த சட்டத்தரணியை நாடவேண்டும்.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறினால் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒருகிழமைக்குப்பின் ஜேர்மனியை

## நேர்முக விசாரணைக்குப்பின் என்ன நடக்கும்?

உங்கள் விண்ணப்பம் சார்பாக விசாரித்த பின் பஸ்சின் மூலம் மத்திய அகதிகள் தங்கும் நிலையத்திற்கு அழைத்துச்செல்வார்கள். அங்கு தங்குவதற்கு வசதிகள் செய்து தரப்படும். அங்கு நீங்கள் மூன்றுமாதம். வரை இருத்தல் வேண்டும்.

அங்கு இவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

- தங்குமிட வசதி
- உணவு
- வைத்திய வசதி
- கிழமைக்கொரு தடவை கைச்செலவிற்காக ஏறக்குறைய 20 DM

ஏற்தனவே அங்கு தங்கியிருப்பவர்களிடம் அல்லது அங்கு கடமை புரிபவரிடம் அருகாமையிலுள்ள அகதிகள் ஆலோசனைநிறுவனம் எங்கே. இருக்கிறது என அறியவும்.

முக்கியம்:

அகதிகளை விசாரிக்கும் நிலையத்தில் (Bundesamt) இல் இருந்து தபால் வந்ததோ என அறியவும். நிராகரித்திருந்தால் ஒரு கிழமையோ அல்லது இரண்டு கிழமையோ இருக்கிறது. அதை. நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்கு. அகதிகளை விசாரிக்கும். நிறுவனத்திலிருந்தும் (Bundesamt) நீதிமன்றத்திலிருந்தும் தபால் கிடைக்கவில்லையானால் அகதிகள் விவகாரம் முடிவுற்றதாக இருக்கும்.

அகதிகள் தஞ்சம் தேடுபவர்கள் தயவுசெய்து அறிவுரை கூறும் நிலையங்களுடன் தொடர்பு கொள்ளவும். உ+ம்: கீழ்க்காணும் கேள்விகள் இருந்தால் பிரச்சனைகள் இருந்தால்.

- உங்கள் அகதிகள் விவகாரம் சம்பந்தமான கேள்விகள்.
- சிறந்ததொரு சட்டத்தரணியை பார்த்தல்.
- இப்போதிருக்கும் இடத்திலிருந்து அல்லது தற்போதைய நகரிலிருந்து வெளிச்செல்ல விரும்பினால் அதற்கு அனுமதிப்பத்திரம் பெறல் வேண்டும். நீங்கள் உங்கள் சட்டத்தரணியை காணவிரும்பினால் அல்லது அறிவுரைகூறும் நிறுவனத்திற்கு போகவேண்டியிருந்தால் மறுக்காமல் அனுமதிப்பத்திரம் கிடைக்கும். அனுமதி பெறாமல் இருக்குமிடத்தில் இருந்து போனால் குற்றமாகக் கருதி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

- நீங்கள் எப்போது வேறு இடத்திற்கு மாற்றப்படுவீர்கள் மாற்றப்பட்ட பின் என்ன நடக்கும் என்பதை அறிய வேண்டும்.
- உங்கள் குடும்பஉறுப்பினர் ஜேர்மனியில் வசித்தால் அந்த இடத்திற்கு நீங்கள் மாற்றப்படலாம்.
- அகதிகளை அங்கீகரிக்கும் காரியாலயத்தில் (Bundesamt) இலிருந்து உங்களுக்கு சாதகமான அறிவித்தல் கிடைத்தால் அதன் கருத்து உம்முடைய தஞ்சம் உரிமையுடையதும் (அல்லது) அகதியாக அங்கீகரிக்கப்பட்ட உரிமையும் பெறுகிறீர். (வெளிநாட்டவர் சட்டம் § 51, 1 Ausl G)
- உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது என அறிவித்தல் உங்களுக்கு கிடைத்தால்.

  இந்த தீர்மானத்தை எதிர்த்து மேன்முறையீடு செய்வதற்கு உங்களுக்கு குறிப்பிட்ட காலமேயிருக்கிறது.

  ஆகையால் அகதிகள்தஞ்ச ஆலோசனை கூறும் நிறுவனங்களை மிக் விரைவாக நாடவும்.

புதிய நகருக்கு மாற்றப்பட்ட பின் என்ன நடக்கும்:

முதல் அகதிகள்காரியாலயத்திற்கும் (Bundesamt) அல்லது நீதிமன்றத்திற்கும் அல்லது உங்கள் சட்டத்தரணிக்கும் புதிய விலாசத்தை கொடுக்கவும்.

மத்திய அகதிகள் நிலையத்திலிருந்தபோது நீங்கள் எதுவித அறிவித்தலும் அகதிகள்காரியாலயத்தில் (Bundesamt) பெற்றிராவிட்டால் புது முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

கொஞ்சகாலம் இருந்த மற்றய அகதிகளிடம் டியக்கொனி சமூகசேவை நிலையம் (Diakone - protestant Social service ) அல்லது கரிதாஸ் சமூக சேவைநிலையம் (caritas - catholic social service) அகதிகள் ஆலோசனை காரியாலயம் (Flüchtlings Beratungsstelle) எங்கிருக்கிறதென அறியவும்.

2) அகதிகள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

நிராகரிப்பு பத்திரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து இரு வாரங்களுக்குள் மேன்முறையீடு செய்தல் வேண்டும். மேலும் ஒரு மாதத்திற்குள் மேன்முறையீட்டுக்கான காரணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு செய்யத்தவறினால் பத்திரம் வழங்கப்பட்ட திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குப்பின் ஜேர்மன் நாட்டை விட்டு வெளியேற வேண்டும்.

ஆ) சாதகமான தீர்ப்பு – நீங்கள் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளீர்கள்.

இதிலும் இரண்டு வகையான சாத்தியக்கூறு உண்டு:

நீங்கள் உரிமையாக அங்கீகரிக்கப்பட்ட அகதிகளாவீர் (சஷரத்து 16a சட்டதிட்டம்).

அகதிகளை அங்கீகரிக்கும் நிறுவனம் (Bundesamt) கீழ்காண்பதை அறிவிக்கும்.

இந்த அகதிகள் விண்ணப்பதாரர் உரிமையாக அங்கீகரிக்கப்பட்ட அகதியாவார். இதன் நிபந்தனையின் படி (Ausl G) வெளிநாட்டவர் சட்டம்)

வெளிநாட்டவர் சட்டம் 51 பிரகாரம் நீர் அங்கீகரிக்கப்பட்டுள்ளீர்:

அகதிகளை அங்கீகரிக்கும் நிறுவனம் (Bundesamt) கீழ் காண்பதை அறிவிக்கும்.

விண்ணப்பதாரர் உரிமையாக அங்கீகரிக்கப்பட்ட அகதியாவார் (இதன் நிபந்தனையின்படி சட்டம் 51Ausl G) உரிமையாக அங்கீகரிக்கப் -பட்ட அகதிகள் தங்கள் உரிமைகள் என்ன என்பதை அறிய வேண்டுமாயின் அகதிகள் ஆலோசனை நிறுவனங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

கீழ்க்காணும் கேள்விகளுக்கும் பிரச்சனைகளுக்கும் அருகாமையிலிருக்கும் அகதிகள் ஆலோசனை நிறுவனத்தை நாடவும்.

- சமூகசேவை நிறுவன உதவி பற்றிய குடியிருக்கும் இடம் பற்றிய வேலைவாய்ப்புக்கள் பற்றிய உங்கள் கேள்விகளுக்கு நாடுங்கள்.
- நிர்வாக நீதிமன்றத்திற்கு முன் அகதிகள் காரியாலயத்தில் (Bundesamt) இருந்து நிராகரித்து அறிவித்தல் வந்தால் சட்டத்தரணி உங்களுக்கு இருந்தால் அவர்கள் நீதிமன்றத்திலிருந்து தபாலை பெற்றுக்கொள்வார்கள். நீங்கள் உங்கள் வழக்கை நிரூபிப்பதற்கு உங்களிடமுள்ள அத்தாட்சிப்பத்திரங்களை கொடுங்கள். எனவே தயவுசெய்து உங்கள் சட்டத்தரணியும் நீதிமன்றமும் உங்கள் தற்போதைய முகவரியை சரியாக தெரிந்து வைத்திருக்கிறார்களா என்பதை திடப்படுத்திக்கொள்ளுங்கள்.
- நீதிமன்றத்திலிருந்து தபால் கிடைத்தால் அதனை நீங்கள் விளங்கிகொள்ள முடியாவிட்டால் நாடுங்கள்.
- உங்களைப் பற்றி விசாரிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து கட்டளை வந்தால் நாடுங்கள்!
- உங்கள் அரசியல் தஞ்சவிசாரணையை நிராகரித்து நீதிமன்றம் முடிவாக தீர்மானித்தால் நாடுங்கள்.

முக்கியம்:

உங்கள் இருப்பிட அனுமதிப்பத்திரம் இன்னும் பல மாதங்களுக்கு பெறுமதியாக இருந்தாலும் அகதிகள் காரியாலயத்தில் (Bundesamt) இருந்தும் நீதிமன்றத்திலிருந்தும் உங்கள் அரசியல்தஞ்ச விசாரணை நிராகரித்து வந்தால் நாட்டை விட்டு வெளியேற்றப்படலாம்.

- நீராகவே விரும்பி உங்கள் தாய்நாட்டிற்கு திரும்பிபோக விரும்பினால்
- நீராக விரும்பி வேறுநாட்டிற்கு குடியேற விரும்பினால்

மேற்குறிப்பிட்ட வினாக்களுக்கு அல்லது பிரச்சனைகளுக்கு அரசியல் தஞ்ச ஆலோசனை நிறுவனத்தை நாடுங்கள்.

அங்கு உங்கள் கேள்விகளுக்கு விடை கிடைப்பதுடன் உங்கள் அகதிகள் தஞ்ச விசாரணைக்கான புத்திமதியும் ஆலோசனையும் கிடைக்கும்.

-- நன்றி --